# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**<u>இந்திய உயர் ஸ்தானிகர் தம்புள்ளை ரங்கிரி விகாரைக்கு விஜயம்</u>**
**<u>(04 ஜூன் 2026)</u>**

இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா அவர்கள் வரலாற்றுச் சிறப்புமிக்க தம்புள்ளை ரங்கிரி விகாரைக்கு 2026 ஜூன் 04 ஆம் திகதி அன்று விஜயம் செய்தார். இந்த விஜயத்தின் போது, உயர் ஸ்தானிகர், ரங்கிரி தம்புள்ள விகாரையின் விகாராதிபதியும், அஸ்கிரிய பீடத்தின் காரக சபையின் சிரேஷ்ட உறுப்பினருமான அதி வணக்கத்திற்குரிய டாக்டர். கொடகம தர்மகீர்த்தி ஸ்ரீ சந்தானந்த மங்களபிதான தேரர் அவர்களைச் சந்தித்தார்.

2. இலங்கையில் கல்வி மற்றும் சமூக அபிவிருத்தி மேம்பாட்டுக்கான முயற்சிகளுக்கு இந்தியா வழங்கும் தொடர் ஆதரவின் ஒரு பகுதியாக, ஸ்ரீ வலகம்பா பிரிவேனாவின் இளம் தேரர்கள் மற்றும் மாணவர்களின் கற்றல் வசதிகளை மேம்படுத்துவதற்காக, உயர் ஸ்தானிகர் அவர்கள் கணனிகள், அச்சு இயந்திரங்கள், மேசைகள், கதிரைகள் மற்றும் ஏனைய கல்வி உபகரணங்களை வழங்கிவைத்தார்.

3. அத்துடன், பகிரப்பட்ட பாரம்பரியத்தைப் பாதுகாப்பதில் இந்தியாவின் பரந்தளவான அர்ப்பணிப்பை சுட்டிக்காட்டிய உயர் ஸ்தானிகர் அவர்கள் பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் தொலைநோக்குப் பார்வையின் கீழ், இரு நாடுகளுக்கும் இடையே பௌத்த உறவுகளை மேம்படுத்துவதற்காக இந்தியா 15 மில்லியன் அமெரிக்க டொலர் விசேட நன்கொடை பொதியை அறிவித்துள்ளது என்றும் குறிப்பிட்டார். இந்த நன்கொடை உதவியின் கீழ், இலங்கை முழுவதும் உள்ள சுமார் 9,000 பௌத்த விகாரைகள் மற்றும் பிரிவேனாக்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ள ஒரு முக்கிய முயற்சியாகும் என்று அவர் தெரிவித்தார்.

4. மேலும், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால மற்றும் நெருக்கமான நட்புறவு வலுவடையவும் , அமைதி மற்றும் செழுமை நிலவவும் அங்கு அவர் பிரார்த்தனை செய்தார். இரு நாடுகளினதுன் மக்களுக்கிடையேயான உறவுகளை ஆழப்படுத்துவதில் இந்தியாவின் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்திய அவர், பொதுவான ஆன்மீக பெறுமானங்களும் பௌத்த பாரம்பரியமும் "நாகரிக இரட்டையர்களின்" இதயத்தில் தொடர்ந்து நிலைத்திருக்கின்றன என்றும், அவை இரு நாடுகளையும் பகிரப்பட்ட சுபீட்சம் மற்றும் நெருங்கிய இருதரப்பு ஒத்துழைப்பின் எதிர்காலத்தை நோக்கி வழிநடத்துகின்றன என்றும் தெரிவித்தார்.

*****

கொழும்பு
08 ஜூன் 2026